Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

## Answers Key:

### நெடுவினா

1. (i) பேச்சுமொழி என்பது, முன் நிற்கும் ஒருவரை நோக்கியோ, சிலரை நோக்கியோ, பலரை நோக்கியோ, பல்லாயிரக்கணக்கானவரை நோக்கியோ நிகழ்வதாய் இருக்கும்.
(ii) எதிரே இருப்பவர் எத்தனை பேர் என்றாலும் 'பேச்சுமொழிக்கு' ஈன்று சில 'தகுதிகள்' அமைந்துவிடுகின்றன.
(iii) பேச்சைக் கேட்பவர் பேசுகிறவர் என்ன கருத்தை, என்ன செய்தியைச் சொல்ல முயல்கிறார் என்பதில் தான் கவனம் செலுத்துவாரே தவிர, அவர் பேச்சில் ஒருமைபன்மை ஒழுங்குற அமைத்துள்ளனவா, கருத்தைச் சுமந்து வருகின்ற சொற்றொடரிலுள்ள சொற்கள் ஒழுங்குமுறையில் அமைந்துள்ளனவா, எழுத்தின் ஒலிப்பு முறை தவறின்றி அமைந்துள்ளதா என்று கவனிக்கமாட்டார்
(iv) ஆனால், எழுத்து வடிவில் ஒரு நூலினைப் படிக்கையில், அந்நூல் என்ன கூறுகிறது என்பதோடு, எழுத்துப்பிழை, இலக்கணப்பிழை ஆகியன இல்லாமல் அமைந்துள்ளனவா என்பதையும் அறிகிறோம்.
(v) எழுத்துப்பிழை, இலக்கணப்பிழை ஆகியன உள்ளனவா என்னும் நோக்கில் நாம் படிக்கவில்லை என்றாலும், இடறும் கற்கள் போல அவை நமக்குத் தோன்றி, படிக்கும் வேகத்தைத் தடை செய்கின்றன.
(vi) இலக்கணம், இலக்கியம் கற்ற பெருமக்கள் அறியக்கூடிய செறிவான அரிய, சொற்களால் நூல்நடை அமைவதே சிறந்தது என்று கருதுவது தவறு.
(vii) பலரும் அறிந்த எளிய சொற்களில் நூல்நடை அமைவதே பெரிதும் வரவேற்கத்தக்கது,
(viii) அது கருத்தைப் பரவலாய் எல்லாரும் அறியச்செய்ய ஏற்ற வழியாகும்.
2. 1. பேச்சுமொழி என்பது எழுத்துமொழியைக்காட்டிலும் உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது.
2. இலக்கிய வழக்கைக் கைவிட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியுடனே கவிதைமொழி அதிக வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாய் மாறிவிடுகிறது.
3. எழுத்து என்பது தனக்குத்தானே பேசிக்கொள்கிற பேச்சு.
4. எழுத்துமொழியில் பேச்சைக் கேட்க எதிராளி என்ற ஒருவன் இல்லை.
5. பேச்சு என்பது மொழியில் நீந்துவது போன்றதாகும்.
6. எழுத்துமொழியில் எழுதுவதை மட்டுமே மனிதனின் கை செய்கிறது.
7. ஆனால், பேச்சுமொழியில் முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக்காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டைத் தருகிறது.
8. பேச்சுமொழியில் கவிதையானது உடம்பின் மேல்தோல் போல இயங்குகிறது.
9. ஆனால், எழுத்துமொழியில் அதே சொற்கள் உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்தி மூடிவிடுகின்றன. எனவே,
எழுத்துமொழியைக்காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்திமிக்கது பேச்சுமொழியேயாகும்.
3. மொழி என்பது அறிமுகமாவதற்கு முன்னால் பொருட்களும் விலங்குகளும் பறவைகளும் வானும் நிலவும் சூரியனும் மரங்களும் செடிகளும் இருந்திருக்கவே இல்லை. மொழி உலகத்தை ஒவ்வொரு பொருளுக்கும் பெயர்களுடன் கட்டியெழுப்பியது. 'மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலைநிறுத்திக் கொள்கின்றன' என்றார் எர்னஸ்ட் காசிரர். மொழி என்ற ஒன்று தோன்றியவுடந்தான் உலகம் கவனிப்புக்குரிய ஒன்றாக மாறியது. உலகத்தை இழையிழையாகப் பிரித்தும் வகுத்தும் தொகுத்தும் விதவிதமான தூரங்களில் வைத்தும் கொடுத்தது மொழி. மொழியின் சாவியைப் போட்டுத் திறக்கும்போது எல்லாம் இதுவரையிலும் பெயர் சூட்டப்பட்டிராத பொருட்களுக்குப் பெயர் சூட்டப்பட்டது. பெயர்களுக்குக் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய வண்ணங்களைப் பூசும் சக்தியை மொழி கொடுத்தது. அவற்றின் முக்கியத்துவத்திற்கேற்ப அவற்றை ஒருமையாகவும் பன்மையாகவும் அடுக்கும் திறனை மொழி வழங்கியது. இவையே 'என்னுயிர் தமிழ் என்பேன்' என்னும் தலைப்பில் நாங்கள் கொண்டுள்ள மொழிப்பற்று ஆகும்.
4. கவிஞர் மல்லார்மே இவர்களுடைய பேச்சு எதிராளியை விளித்துப் பேசுவது போன்றது அன்று. இவர்களுடைய கவிதைகளில் பேச்சு என்பது மூடிய நிலையில் செயல்படுகிறது. தனிப்பட்ட ஒவ்வொரு சொல்லும் பிறிதொன்றைப் பேசுவதோடு மட்டுமல்லாமல் தன்னையே பேசிக் கொள்கிறது. குறியீடுகளின் கூட்டம் ஒரு முனையிலும் மொழி மறுமுனையிலும் இருக்கையில் கவிதையின் பேச்சு, இடையில் இருக்கும் வெளியில்
புழங்குகின்றது. இதன்படி ஆராய்ந்து பார்த்தால் கூற்றில் குறியீடு எனப்படுவது கவிதையில் 'சீட்டெடுக்க' என்னும் பொருளாக வந்துள்ளது.

### சொற்களைப் பொருளறிந்து பொருத்துக

5.

| கவிஞர் | மொழிபெயர்ந்தலர் |
|---|---|
| i) வால்ட் விட்மன் | சங்கர் ஜெயராமன் |
| ii) ஸ்டெஃபான் மல்லார்மே | வெ. ஸ்ரீராம் |
| iii) பாப்லோ தெரூடா. | ஆ. இரா. வேங்கடாசலபதி |
| iv) மனோரமா பிஸ்வாஸ் | இராசேந்திரன் |

6.

| கவிஞர் | பாடியபொழி |
|---|---|
| i) மனோரமா பிஸ்வாஸ் | ஒரியபொழி |
| ii) ஸ்டெஃபான் மல்லார்மே | பிரெஞ்சுமொழி |
| iii) பாப்லோ தெரூடா. | ஆங்கிலமொழி |
| iv) ஆற்றுர் எலிவாமா. | மலையாளமொழி |

### Multiple Choice Question

7. (c) எழுத்து மொழியை விடப் பேச்சுமொழி எளிமையானது.
8. (b) அமெரிக்கா
9. (d) ஸ்டெஃபான் மல்லார்மே

10. (b) மல்லார்மே
11. (a) இராசேந்திரன்
12. (a) கா.சிவதம்பி
13. (c) ஒரிய

QB 365 Study Material
QUESTION BANK 365